**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 18 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் புதன்கிழமை

**<u>இடைக்கால மனு எண்.12/2026</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண்.168/2022</u>**

ராஜாமணி ... **மனுதாரர் / 3 ம் பிரதிவாதி**

//எதிர்//

1. அருண்ராஜ் ... **எதிர்மனுதாரர்/வாதி**

2. மாவட்ட ஆட்சியர்,

கோயம்புத்தூர் மாவட்டம்.

3. தாசில்தால், தாலுக்கா அலுவலகம்,

சூலூர். ... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.நந்தக்குமார், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ராஜேஷ், அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.S.மகேந்திரன், அவர்கள் ஆஜராகியும் மனுவிற்று ஆட்சேபணை ஏதும் இல்லை என்று குறிப்பிட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 1(A) (3)ன் கீழ் பி.சா.1 சாட்சியத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டி மனுதாரர்/ 3 ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). 20.01.2022 அன்று காலமான, பொன்னுசாமியின் மகனான ராமகிருஷ்ணனின் சட்டபூர்வ வாரிசை விளம்புகை செய்யக்கோரி, இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலஞ்சென்ற ராமகிருஷ்ணனின் மனைவி மனுதாரர் ஆவார். மனுதாரரின் காலஞ்சென்ற கணவர் ராமகிருஷ்ணனுக்குச் சொந்தமான சொத்துக்களை அபகரிக்கும் உள்நோக்கத்துடனேயே, வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2). மனுதாரர்/3 ம் பிரதிவாதி எதிர்வழக்குரையை தாக்கல் செய்த போது 3 ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆவணங்களையும் 3 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்ய இயலவில்லை. இவ்வழக்கை தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்க, 3 ம் பிரதிவாதி தரப்பில் தொடர்புடைய ஆவணங்களைத் தாக்கல் செய்வது அவசியமாகிறது. எனவே, மேற்கூறிய ஆவணங்களை பி.சா.1 சாட்சியம் மூலமாக நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க, மனுதாரர்/3 ம் பிரதிவாதிக்கு அனுமதியளிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு அனுமதிக்கப்படாவிடில், மனுதாரர்/3 ம் பிரதிவாதி ஈடுசெய்ய முடியாத இழப்பிற்கும் மிகுந்த இன்னலுக்கும் ஆளாக நேரிடும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

2.1). மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளக்கூடிய சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க

கடமைப்பட்டவர் ஆவார். வாதி ராமகிருஷ்ணன் என்பவரின் வாரிசு சான்றிதழ் கோரி விளம்புகை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்பதை இந்த எதிர்மனுதாரர் ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் மற்ற பிற விபரங்கள் பொய்யானது.

2.2). வாதி அவரது தந்தை ராமகிருஷ்ணன் என்பவரின் வாரிசு சான்றிதழ் கோரி விளம்புகை பரிகாரம் கேட்டு இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார். 3 ம் பிரதிவாதி ராஜாமணி என்பவருக்கும் வாதியின் தந்தை ராமகிருஷ்ணன் அவர்களுக்கும் திருமணம் எதுவும் நடைபெறவில்லை. வாதியின் தந்தை ராமகிருஷ்ணனின் சட்டப்படியான வாரிசு 3 ம் பிரதிவாதி இல்லை. 3 ம் பிரதிவாதியின் கணவர் சிவசாமி என்பவரின் பெயரை தாவாவில் வாதி குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் 3 ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அவருடைய ஆதார் அட்டை, குடும்ப அட்டை மற்றும் பிற ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2.3). 3 ம் பிரதிவாதியின் கணவர் பெயர் சிவசாமி, 3 ம் பிரதிவாதியின் தாயார் பழனியம்மாள், அவரது மகன் சசிக்குமார், மகள் சாந்தி என்பவர் மீது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடத்தில் தாவா தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.156/2016 என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி தாவாவில் 3 ம் பிரதிவாதி அவரது கணவர் பெயர் சிவசாமி என குறிப்பிட்டுள்ளார். மேலும் 3 ம் பிரதிவாதி மேற்படி தாவாவில் தாக்கல் செய்துள்ள இடைநிலை மனுவில் ராமகிருஷ்ணனுக்கும், 3 ம் பிரதிவாதிக்கும் எவ்வித உறவும் இல்லை எனவும், ஆதார் அட்டையில் தவறாக கணவர் பெயர் ராமகிருஷ்ணன் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி 3 ம் பிரதிவாதி பல்லடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ராமகிருஷ்ணன் என்பவருக்கும் 3 ம் பிரதிவாதியான ராஜாமணிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை எனவும், 3-ஆம்

பிரதிவாதியின் வாரிசுகள் சசிக்குமார் மற்றும் சாந்தி எனவும், 3-ஆம் பிரதிவாதியின் தாயார் பழனியம்மாள் எனவும், மரபணு சோதனை மூலம் நிரூபணம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 10-ன் கீழ் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது இ.ம.எண்:-239/2024 என்ற எண்ணின் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

2.4). பல்லடம் உரிமையியல் நீதிமன்றத்தில் 3ம் பிரதிவாதியின் கணவர் சிவசாமி என தெரிவித்து வழக்கு தாக்கல் செய்து தற்போது இந்த தாவாவில் 3ம் பிரதிவாதியின் கணவர் ராமகிருஷ்ணன் என தெரிவித்து ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி இரு வழக்கிலும் ஒரே வழக்குரைஞர் தான் ஆஜராகியுள்ளார். மனுதாரர்/3ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையில் 3ம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் என்பவருடன் வாழ்ந்து வந்ததாக மட்டுமே குறிப்பிட்டு எதிருரை தாக்கல் செய்துள்ளார். எதிருரையில் ராமகிருஷ்ணன் என்பவரின் சட்டப்படியான வாரிசு 3ம் பிரதிவாதி தான் என எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, 3ம் பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் மனுதாரர்/3 ம் பிரதிவாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

5.1). மனுதாரர் தரப்பில், மனுதாரர்/3 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை தாக்கல் செய்த சமயத்தில், 3 ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆவணங்களையும் 3 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்ய இயலவில்லை. இவ்வழக்கை அதன் தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்க, 3 ம் பிரதிவாதி தரப்பில் தொடர்புடைய ஆவணங்களைத் தாக்கல் செய்வது அவசியமாகிறது என சொல்லப்பட்டுள்ளது.

5.2). 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில், 3 ம் பிரதிவாதி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடத்தில் அசல் வழக்கு எண்.156/2016 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்படி தாவாவில் 3 ம் பிரதிவாதி அவரது கணவர் பெயர் சிவசாமி என குறிப்பிட்டுள்ளார். மேலும் 3 ம் பிரதிவாதி மேற்படி தாவாவில் தாக்கல் செய்துள்ள இடைநிலை மனுவில் ராமகிருஷ்ணனுக்கும், 3 ம் பிரதிவாதிக்கும் எவ்வித உறவும் இல்லை எனவும், ஆதார் அட்டையில் தவறாக கணவர் பெயர் ராமகிருஷ்ணன் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி 3 ம் பிரதிவாதி பல்லடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ராமகிருஷ்ணன் என்பவருக்கும் 3 ம் பிரதிவாதியான ராஜாமணிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை எனவும், 3-ஆம் பிரதிவாதியின் வாரிசுகள் சசிக்குமார் மற்றும் சாந்தி எனவும், 3-ஆம் பிரதிவாதியின் தாயார் பழனியம்மாள் எனவும், மரபணு சோதனை மூலம் நிரூபணம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 10-ன் கீழ் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது இ.ம.எண்.239/2024 என்ற எண்ணின் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. பல்லடம் உரிமையியல் நீதிமன்றத்தில் 3 ம் பிரதிவாதியின் கணவர் சிவசாமி என தெரிவித்து வழக்கு தாக்கல் செய்து தற்போது இந்த தாவாவில் 3 ம் பிரதிவாதியின் கணவர் ராமகிருஷ்ணன் என தெரிவித்து ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி இரு வழக்கிலும் ஒரே வழக்குரைஞர் தான் ஆஜராகியுள்ளார்.

5.3). மனுதாரர்/3 ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையில் 3 ம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் என்பவருடன் வாழ்ந்து வந்ததாக மட்டுமே குறிப்பிட்டு எதிருரை தாக்கல் செய்துள்ளார். எதிருரையில் ராமகிருஷ்ணன் என்பவரின் சட்டப்படியான வாரிசு 3 ம் பிரதிவாதி தான் என எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அவ்வாறு இருக்கும்பட்சம் எதிருரையில் சொல்லாத ஒரு சங்கதிகளுக்காக ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5.4). இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால், இரு தரப்பினரும் இந்த நீதிமன்றத்தின் முன் இரு தரப்பு வழக்கையும் தெளிவுபடுத்த வாய்ப்பளிக்க வேண்டும். இந்த நீதிமன்றம் இரு தரப்பு வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே, மனுதாரர்/3 ம் பிரதிவாதி தனது வழக்கை நிரூபிக்க மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர்/3 ம் பிரதிவாதியின் கணவர் யார் என்பது பற்றி இம்மனுவில் தீர்மானிக்க இயலாது. அசல் வழக்கு இறுதி தீர்ப்பின் போது தான் தீர்வு காண முடியும். எனவே நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.12/2026 in
OS.168/2022 in
Dated:.01.04.2026
DMC, Sulur.